**In the Court of the District Munsif, Eraniel**

**Original Suit No. 65/2018** **Date:23.01.2026.**

**(DW2)-** மாலதி

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. நான் எந்த தேதியில் இருந்து கல்லுகூட்டம் பேரூராட்சி செயல் அலுவலராக பணியாற்றி வருகிறேன் என்றால் 19.06.2023 தேதியில் இருந்து பணியாற்றி வருகிறேன். நான் 5 முதல் 8 பிரதிவாதிகளுக்கும் சேர்த்து தான் சாட்சியம் அளிகிறேன் என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்தில் கட்டிடம் கட்டுவது சம்மந்தமாக பேரூராட்சியில் எத்தனை முறை மனு செய்யப்பட்டது என்றால் இரண்டு முறை கொடுக்கப்பட்டது. முதலில் எப்போது மனு கொடுத்தார்கள் என்றால் 2018 ம் ஆண்டு கொடுத்தார்கள். 10.09.2018 தேதியில் கொடுத்தார்கள் என்றால் சரிதான்.

2. பி.வா.சா. 5 ஆவணப்படி 06.09.2018 தேதியில் கல்லுகூட்டம் பேரூராட்சியில் ஆவணம் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி 2018 ஆம் வருடம் கொடுக்கப்பட்ட இரண்டு மனுக்கள் என்ன ஆனாது வழக்கு நிலுவையில் இருந்ததால் இரு மனுக்கள் மீதும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தற்போது எந்த மனுவின் அடிப்படையில் கட்டிட அனுமதி வழங்ப்பட்டது என்றால் இணையவழி மனுவின் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது. மேற்படி இணையவழி மனு எப்போது கொடுக்கப்பட்டது என்றால் நினைவில் இல்லை. எந்த ஆண்டு கொடுக்கப்பட்டது என்றால் 2024 ஆம் வருடம் கொடுக்கப்பட்டது.

3. நான் கல்லுகூட்டம் பேரூராட்சியில் செயல் அலுவலராக பணியில் சேர்ந்தபோதே எனக்கு இந்த வழக்கு நிலுவையில் இருக்கிறது தெரியும் என்றால் தெரியும். இந்த வழக்கின் 2,3 பிரதிவாதிகள் மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நீதிபோரணை மனுவில் இந்த வழக்கு நிலுவையில் உள்ளது பற்றி தெரிவிதிருந்தார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி நீதிப்போரணை மனுவில் பதில் மனுவில் உள்ள விபரங்கள் யார் உயர் நீதிமன்ற வழக்கஞருக்கு தெரிவித்தார்கள் என்றால் எதிர் உரையாக அப்போது இருந்த செயல் அலுவலர் தயார் செய்து கொடுத்துள்ளார். அதில் என்ன விபரம் குறிப்பிட்டுள்ளர்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது நான் அதை பார்க்கவில்லை.

4. மேற்படி நீதிப்போரணை மனு இறுதி விசாரணைக்கு வரும் சமயத்தில் நான் தான் செயல்

அலுவலராக இருந்தேன் என்றால் சரிதான். வழக்கை நடத்த நீதிமன்றத்திற்கு சென்றேனா என்றால் என் சார்ப்பாக எனது அலுவலக பதிவக எழுத்தர் சென்றார். அந்த சமயத்திலாவது இந்த நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும் விபரத்தை எனது வழக்கறிஞர் இடமோ நீதிமன்றத்திலோ தெரிவித்தேன் என்றால் எனது வழக்கறிஞர் இடம் தெரிவித்தேன். நான் தெரிவித்தை காட்டக்கூடிய ஆவணங்கள் எனது கோப்பில் உள்ளதா என்றால் வாய் மொழியாக தெரிவித்தேன். நான் வாய்மொழியாக தெரிவித்தேன் என்று வழக்கிற்காக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

5. உயர் நீதிமன்ற நீதிப்போரணை உத்தரவில் 2,3 பிரதிவாதிகளுக்கு கட்டிட அனுமதி கொடுக்க வேண்டும் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான், 8 வாரத்திற்குள் மனுவில் இறுதி உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி உயர் நீதிமன்ற உத்தரவை அந்த மனுவில் தீர்வு காணும் வரை இந்நீதிமன்றத்தில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி உயர் நீதிமன்ற உத்தரவான பி.வா.சா. ஆ.10 ஆவணத்தில் 04.07.2023 தேதியிட்ட மனுவை பரிசீலித்து முடிவு செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 04.07.2023 தேதியிட்ட மனு என்ன மனு என்றாலும் எதற்காக கொடுக்கப்பட்டது என்றாலும் நான் பார்க்கவில்லை.

6. நான் உயர் நீதிமன்ற உத்தரவில் குறிப்பிட்டுள்ளவாறு 8 வாரத்திற்குள் மேற்படி மனுவில் முடிவு எடுத்துவிட்டேனா என்றால் எனக்கு உத்தரவு கிடைக்கப்பெற்ற தேதியில் இருந்து 8 வாரத்திற்குள் முடிவு எடுத்துவிட்டேன். பி.வா.சா.ஆ.6 உத்தரவில் நீதிமன்ற உத்தரவை பற்றி எந்தவித குறிப்பும் இல்லை என்றால் சரிதான், அது இணையவழி உத்தரவாகும் அதில் குறிப்பிட முடியாது. இந்த வழக்கு பட்டிகை சொத்தில் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி வேண்டி என் அலுவலகத்தில் நேரடியாக எந்த மனுவும் கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான், இணையவழி மனுதான் கொடுத்தார்கள். எந்த வருடத்தில் இருந்து இணையவழி மனு செய்யும் முறை நடைமுறைக்கு வந்தது என்றால் 2024 ஆம் வருடத்தில் இருந்து நடைமுறைக்கு வந்தது.

7. நான் பி.வா.சா.ஆ. 10 உத்தரவை பின்பற்றவில்லை என்றால் சரியல்ல. உயர் நீதிமன்ற உத்தரவில் குறிப்பிட்டுள்ள மனுவில் நாளது தேதி வரை எந்த வித உத்தரவும் பிறப்பிக்கவில்லை என்றால் சரியல்ல. மத சம்மந்தமான பிரச்சனைகள் எழுவதற்கு வாய்புகள் இருக்கும் பட்சத்தில் தபசில் இடத்தில் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி வழங்கும் போது அதை வழிப்பாட்டு தளமாக மாற்றினால் மேற்படி அனுமதி ரத்து செய்யப்படும் என்ற நிபந்தனையாவது நான் விதித்திற்க வேண்டும் என்றால் இணையவழி உத்தரவில் அதை குறிப்பிடவில்லை, நேரடியாக எழுதி

வாங்கியுள்ளோம். நான் இந்த வழக்கை மற்றும் உயர் நீதிமன்ற உத்தரவுகளையும் மதிக்கமால் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு ஆதரவாக எந்த வித விசாரணையும் மேற்கொள்ளாமல் சட்ட விரேதமாக ஒரு அனுமதி வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது மேற்படி பிரதிவாதிகளுக்காக வேண்டி சாட்சியம் அளிகிறேன் என்றால் சரியல்ல.